Tamil Heritage Foundation International Digital Library EBook collection

Reg. No. M. 1434 தனிப்பிரதி அணா 0—1—6

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

நாடார்குலமித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 4-0-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 5-0-0.

திங்கட்கிழமை தோறும் வெளிவரும்,

வாரப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்திரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்.

நாடார்குல மித்திரன்
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 8-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-8-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 8 | கலியப்தஹூ௫௰௨௭ அக்ஷய ஹூ அற்பிசி மீ௳ ௲ ௨ திங்கட்கிழமை 1926ஹூ அக்டோபர்மீ 25வ | இதழ் 10

## புஸ்தகவிளம்பரம்.

சகலரும் வாசித்தறியவேண்டிய அருமையான புஸ்தகம் "புலால்மறுப்பு." விலை அணா 3. 10 புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு 2 புஸ்தகங்களும் 100 புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு 25 புஸ்தகங்களும் கமிஷனுக்கொடுக்கப்படும். பலவேத வசனங்களைக் கொண்டு எழுதப்பட்டது. "இந்தியாவை இரட்க்ஷிக்கும் ஓர்வழி" அணா 1½. 10 புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு 2 புஸ்தகங்களும் 100 புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு 30 புஸ்தகங்கள் கமிஷனுக்க் கொடுக்கப்படும். வி. பி. சார்ஜ் கிடையாது.

"இயல்வேதம்" அரிச்சுவடிகாண்டம் அணா 3½. 10 புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு 2 புஸ்தகங்கள் கமிஷனுக்கொடுக்கப்படும். 1 புஸ்தகம் வேண்டியவர்கள் புஸ்தகக் கிரயத்தோடு ½ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக்போஸ்டில் அனுப்பப்படும். உடனே தருவித்து வாசியுங்கள்.

விலாசம்:— P. Abraham, Catechist
Watawala, Ceylon

## நாடார்பாங்குலிமிட்டெட்,

## தூத்துக்குடி.

## விசேஷ வட்டி.

ஒரு வருஷத்துக்குக் குறையாமல் தவணைக்குப்போடும் தொகைக்கு வருஷம் ஒன்றுக்குரூபாய்

100 க்கு ரூ 6 வீதம் வட்டிகொடுக்கப்படும்,

விசேஷமாய் மைனர்கள், விதவைகள், பள்ளிக்கூடங்கள், பேட்டைகள் மகமை முதலிய பொது ஸ்தாபனங்களின் பணத்தை பந்தோபஸ்தாயும் நல்லவட்டியிலும் வைப்பதற்கு இதுவே ஏற்றஇடம். அவரவர்களுக்கு வேண்டிய பிரகாரம் மைனர்கள், கார்டியன்கள், அல்லது காரியதரிசிகள், பெயரால் கணக்குவைத்து யாரிடம்வட்டியும் முதலும் கொடுக்க விருப்பமோ அவ்விதம்கொடுக்க ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கரன்ற் அக்கவுண்டிலும், சேவிங்க்ஸ் பாங்க் கணக்கிலும் பணம் போட்டு தேவையானபோது எடுத்துக்கொள்ளலாம். விபரங்களைப் பற்றி ஏஜெண்டுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

No. 1.
பட்டணம் பொடி

உலகெங்கும் புகழ் பெற்று

24 தங்க மெடல்கள் பரிசு பெற்ற

மதராஸ்

என். வி. ஷண்முகம் கம்பெனியார்

தந்தி விலாசம் 'மூக்குத் தூள்'
தபால் பெட்டி நெ. 555
மதராஸ்.

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம், வாடை கமழ்கின்றன.
ஒவ்வொரு இந்தியரின் மனத்தையும் குதூகலிக்கச் செய்கிறது.
மாரிகாலத்துக்கு ஏற்றவாறு காரம் மணம் ததும்பும்படி தயாரிக்கப்படுகிறது.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## உண்மையான தீபாவளி.

தீபாவளி என்பது, வருஷத்திற்கொருமுறை வந்து பெருவாரியான இந்து குடும்பங்களுக்கு சந்தோஷத்தையும், ஆனந்தத்தையும் கொடுத்து தங்கள் குழந்தை குட்டிகள் மக்கள் மருமக்கள், முதலானவர்களோடு களிக்கும்ஒரு பெரிய பண்டிகையாகும். அப்பண்டிகையன்று ஏழையானாலும் பணக்காரனானாலும், கூலிக்காரனானாலும் முதலாளியானாலும் பண்டிகையை அனுபவிப்பதில் வித்தியாசமில்லாமல் தங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தபடி ஸ்நானம்செய்வதும், புதுவஸ்திரங்களை அணிவதும், பலகாரங்களை உண்பதும் முக்கிய கொள்கையாகும். இக்கொள்கைகள் எந்தத் தத்துவங்களைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டன என்பதில் எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும் பொதுவாய் மக்கள் சந்தோஷத்திற்கு புதிய வஸ்திரங்களையே அணியவேண்டுமென்றிருப்பதனால் ஏழைத் தொழிலாளருக்கு ஒரு விடுதலையும் ஏற்பட்டு வந்ததெனபது அபிப்பிராய பேதமில்லாமல் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். தற்கால அனுபவத்திலோ சந்தோஷமும் களிப்பும் பலவிதமாயிருந்தாலும ஏழைத் தொழிலாளர்களுக்கு பெருந்துரோகத்தை செய்வதற்கே வருவதாகவும் ஏற்பட்டுவிட்டது. இவ்வித துரோகத்திற்கு பணக்காரர்களும், உத்தியோகஸ்தர்களுமே தான் பெரும்பாலும ஆதரவளிப்பவர்களாயிருக்கிறார்கள். காரணமென்னவென்றால் பட்டுச்சேலைகளும்,பட்டுத்துப்பட்டாக்களும், சரிகைச்சேலைகளும்,சரிகைத் துப்பட்டாக்களும், மல்லுகளும், சல்லாக்களும இவர்கள் தான் வாங்குகிறார்கள். அதோடு இவர்களைப் பார்த்து இவர்களைப்போல் நடிக்கவேண்டுமென்கிற சிலர் தங்களுக்குத் தகுதியில்லாதிருந்தாலும் கஷ்டப்பட்டு இவற்றைவ்ய வாங்க ஆசைப்படுகிறார்கள். கூலிக்காரர்களாகவும ஏழைகளாகவும உள்ளவர்களுக்கு இந்த முதலாளிகளும பணக்காரர்களுமாயிருப்பவர்கள் துணி வாங்கிக் கொடுக்கும முறையிலும வெளி நாடுகளிலிருந்து வந்த துணிகளையே வாங்குங்காரணங்களால் தீபாவளி வருகிறது என்றால் பெரும் ஏழைநூற்புக்காரர்களுக்கும், கைநெசவுகாரர்களுக்கும் பெரிய துரோகமும் கொடுமையும் வரப்போகிறது என்று தான் அஞ்ச வேண்டியதாக இருந்து வருகிறது. மகாத்மாகாந்தியின் சகாப்தமான இததீபாவளிப் பண்டிகையை தேசத்திற்கும் ஏழை மக்களுக்கும் உண்மையான சந்தோஷத்தையும் நன்மையையும கொடுக்கத்தக்கதான பரிசுத்த பண்டிகையாக்கவேண்டுமென்று மூன்று நான்கு வருஷங்களாக எவ்வளவோ பிரயத்தனங்கள் பட்டும் இன்னும் அதுசரியான பலனைக் கொடுக்குமென்று நம்புவதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஒரு குடும்பத்திற்கு தீபாவளி வருவதாயிருந்தால் தங்கள் மக்களையும், மருமகக்களையும் சேர்த்து வைததுககொண்டு ஒவ்வொருவரையும பார்த்து உனக்கு எந்த மாதிரி பட்டு வேண்டும்? உனக்கு எந்த மாதிரி துப்பட்டாவேண்டும்? என்றுகேட்டு, என்ன மாதிரியான பட்டோ, துப்பட்டாவோ சேலையோ வாங்கினால் அவர்கள் திருப்தி அடைவார்கள் என்பதையும மாத்திரம் யோசிக்கிறார்களே ஒழிய, என்ன மாதிரி துணி வாங்கினால் நம நாட்டில் தினம் ஒரு வேளை வயிறார கஞ்சி குடிப்பதற்குக்கூட மார்க்கமில்லாமல் தங்கள் மானத்தையும் கற்பையும் விற்று ஜீவிக்க வேண்டி கட்டாயப் படுத்தப்படுகிற ஏழை நூல் நூற்பவர்களையும், கைநெசவுக்காரர்களையும் திருப்தி செய்வதற்கு உதவும் என்று இவர்கள் கொஞ்சங்கூட எண்ணுவதேயில்லை. கிராமங்களில் கஞ்சிக்குக் கஷ்டப்பட்டு பட்டணங்களுக்கு வந்து தெருத் தெருவாய் அலையும ஸ்திரீகள் நம் சகோதரிகள் என்பதை கொஞ்சமும் கவனிப்பதில்லை இந்த ஸ்திரீகளின் வாழ்வும தாழ்வும் நமக்கும சம்மந்தப்பட்டதென்பதைக் கொஞ்சமும் உணர்வதில்லை. நெசவுத் தொழிற்காரர்கள் தங்களுக்கு சரியான தொழிலில்லாமல் வெளிநாடுகளுக்குக் கூலிகளாகச்சென்று, வெள்ளைக்காரத் தோட்டக்காரர்களிடமும் கங்காணிகளிடமும் தங்கள் பெண்டுபிள்ளைகளையும்பறிகொடுத்து, கற்பிழக்கச்செய்து மானங்கெட்டுகஷ்டப்படுகிறார்களே யென்று கொஞ்சமும் கவலைப் படுவதேயில்லை. அவர்களும் நம்முடைய சகோதரர்கள் தானே; அவர்கள் மானம் கெட்டுக் கஞ்சிக்கு அலைய நாம்தானே காரணமாயிருந்து வருகிறோம் என்று கொஞ்சமும் சிந்திப்பதேயில்லை.

உத்தியோகமும், பணமும், அந்தஸ்தும் வந்தால் தேசாபிமானம் ஓடிப் போய்விடுகிறது. ஏழைகளிடத்தில் அன்பும் தயாளமும் ஏற்படும்வழி அடைபட்டுப்போய்விடுகிறது. இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது ஒரு தூக்குத் தண்டனையுள்ளவனுக்கு தூக்கிலிடும் தேதி கிட்ட வர வர எவ்வளவு பயமும் கஷ்டமும் ஏற்படுமோ அதுபோல் தீபாவளி வருகிறதென்றால் தீபாவளி நாள் கிட்ட நெருங்க நெருங்க ஐயோ நம் ஏழைக் கூலிக்கார ஸ்திரீகள் வயிற்றிலும் வாயிலும் மண்ணைப் போடுவதான காரியங்கள் நடைபெறப்போகிற நாள் வரப்போகிறதே! வரப்போகிறதெ!! என்ற பயமும் கஷ்டமும் மனவேதனையும் ஏற்படச் செய்கிறது. எவ்வளவோ நன்மைக்காக ஏற்பட்ட பண்டிகை இக்கொடுமைக்கு உதவவாவரவேண்டும் என்று மனம் பதறுகிறது. நமது நாட்டில் நன்மைக்காக ஏற்பட்ட காரியங்களெல்லாம் எப்படி தீமைக் குதவப் பட்டு வருகிறதோ அதுபோல் நமது தீபாவளியும் இவ்வளவு பெரிய தீமைக்கு ஆளாகிறதேளன்று தேச க்ஷேமத்தில் கவலையுள்ளவர்களும் ஏழைகளிடத்தில் அன்புள்ளவர்களும் கவலைப்படாமலிருக்க முடியாதென்றே நம்புகிறோம். தீபாவளியின் போது அர்த்தமில்லாமல் சுடும் வெடிமருந்து பட்டாசுக்காக நம் நாட்டிலிருந்து எவ்வளவு பணம் வெளிநாட்டுக்குப் போகிறதென்பதை நமதுநாட்டு ஜனங்கள் அறிவதேயில்லை. ஏதோ சிலர் அறிந்தாலும் அதைப்பற்றிக் கவலைப் படுவதேயில்லை. ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால் அத்தேச மக்களுக்கு கடுகளவாவது தேசாபிமானமும், பரோபகார எண்ணமும் ஏற்பட்டால் தான் முன்னுக்கு வர முடியும். அது இல்லாத நாடு எவ்விதத்திலும் முன்னுக்குவராது. ஆதலால் இவ்வருஷ தீபாவளியை தேச விடுதலைக்கும் ஏழைகளின் கஷ்டம் நீங்குவதற்கும் ஏழைத் தொழிலாள சகோதர சகோதரிகள் நன்மைக்கும் உபயோகப்படும்படி கொண்டாட வேண்டுமானால் பணக்காரர்கள், உத்தியோகஸ்தர்கள், வகீல்கள், முதலாளிகள், ஏழைகள், கூலிக்காரர்கள், நடுத்தர வகுப்பினர் முதலிய எல்லோரும் தீபாவளியின் பொருட்டு தங்களுக்காகவும் தங்கள் பெண்டுபிள்ளைகள் மக்கள் மருமக்கள் வேலைக்காரர்கள் ஏழைகள் முதலியவர்களுடைய ஒவ்வொருவருடைய திருப்திக்காகவும் செலவு செய்ய நினைக்கும் ஒவ்வொரு பைசாவும் நம் நாட்டிலேயே இருக்குமா? நம் நாட்டில் கஞ்சிக்கில்லாமல் திண்டாடும் ஏழைகளுக்கும் கூலிக்கார சகோதர சகோதரிகளுக்கும் போய்ச் சேருமா? அவர்கள் திருப்தி அடைவார்களா? என்று யோசித்துப்பார்த்தே செய்யவேண்டியது முக்கியமான கடமையாகும்.

அப்படிச் செய்வது வாஸ்தவமானால் துணி வாங்குவதில் வெளிநாட்டுக்குப் பணம் போகும்படியான பட்டோ, சரிகையோ; வெளிநாட்டு மல்லோ, சல்லாவோ இன்னும் பலமாதிரியான வெளிநாட்டு சாமான்களையோ வாங்காமல் நம் நாட்டில் நம் ஏழைச் சகோதரிகளால் கைராட்டினத்தில் நூற்கப் பட்டு ஏழைச் சகோதரர்களால் கைத்தறியில நெய்யப்பட்டதுமான கதர் துணியையே வாங்கவேண்டும்; அதையே உடுத்தவேண்டும். அதன் தத்துவத்தை நமது மக்கள் மருமககள். பெண்டுபிள்ளைகளுக்குச் சொல்லி அதையே அவர்களையும் உடுத்தச் செய்யவேண்டும். இதனால் எத்தனை ஏழைக் குடும்பங்களில் தீபாவளி சந்தோஷமாய் நடைபெறும். இப்படிச் செய்யாவிட்டால் எத்தனை குடும்பங்களுக்கு தீபாவளி இல்லாமல் போய்விடும் என்பதையும் அறியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இப்படியே ஒவ்வொருவரும் நினைத்து எல்லோரும கதர் வாங்க ஆரம்பித்தால் ஒரு சமயம எல்லோருக்கும் கதர் கிடைப்பது கஷ்டமாய்ப் போனாலும் போகலாம். ஆதலால் இந்த எண்ணம் உள்ள தேசாபிமானிகளும் ஏழைக்கிரங்குபவர்களும் இப்பொழுதே கதர் வாங்கி வைத்துக்கொள்ளுங்கள். புதுப்பாளையத்திலும், திருப்பூரிலும், இன்னும் சில இடங்களிலும் மொத்தமாய் கதர்கிடைக்கும். ஈரோடு, சேலம், மதுரை, திருநெல்வேலி, காரைக்குடி, விருதுநகர், திருச்சி, தஞ்சாவூர், மன்னார்குடி, கோயமுத்தூர், கடலூர், மதராஸ், மாயவரம், வேலூர், ராஜபாளையம முதலிய இடங்களில் காங்கிரஸ் டெப்போவும் காங்கிரஸ் நற்சாக்ஷி பத்திரம்பெற்ற கதர் கடைகளும் இருக்கின்றன. சர்க்கா சங்கத்தார் கூடுமானவரை விசாரித்து சுத்தமாய் கதர் உற்பத்தி செய்கிறவர்களுக்கும் விற்பவர்களுக்கும் காங்கிரஸ் நற்சாக்ஷிபத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். வாங்குகிறவர்கள் தயவு செய்து கவனித்து சுத்தக்கதராய்ப் பார்த்து வாங்கவேண்டும். போலிக்கதர், மில்நூல் கதர், வெளிநாட்டு நூல்கதர் இவைகள் வாங்குவதால் தேசத்திற்கோ, ஏழைச் சகோதர சகோதரிகளுக்கோ ஒருவித நன்மையும் உண்டாகப்போவதில்லை.

குறிப்பு:-குடியரசு மேற்கண்டவாறு கூறுவதை முழுமனதுடன் ஆதரிக்கின்றோம். அருப்புக்கோட்டையிலும் காந்தி கதர்க் கடை ஸ்தாபகமாகியிருக்கிறது. (ப-ர்.)

## இராமநாதபுரம்—திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்தவ தொகுதி.

# ஸ்ரீமான் டானியல் தாமஸ்

## நாடார் அவர்களுக்கே ஓட்டுக் கொடுங்கள்.

### எங்கும் ஆதரிக்கின்றனர்.

### ஞாபகந்தானா?

சென்னை சட்டசபைக்கு திருநெல்வேலி இராமநாதபுரம் ஜில்லாக்களின் கிறிஸ்தவ தொகுதிக்கு அபேட்சகராக முன்னிற்கும் ஸ்ரீமான் டானியேல் தாமஸ்நாடார் பி. ஏ. வக்கீல் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதாகவும் அவர்களின் வாக்குச்சாதுரிய குணத் திறமையையும் வெளியாக்கியுள்ளோம். அதனை நன்கு கவனித்திருப்பீர்களென்று நம்புகிறோம். இப்பொழுது நாடார்குல வோட்டர்கள் கவனிப்பதென்னவென்றால், நான் ஸ்ரீமான் டி. தாமஸ்நாடார் அவர்களைக் கண்டு அவர்களின் வாக்குச்சாதுரிய குணத்தையும் ஏழைகள் புகழ்ந்து பாராட்டுவதையும் நன்கறிந்தமையால் அம்மகானை இத்தஎலெக்ஷனில் நாடாருலகம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது எமது தாத்பரியம். ஆகையால் நாடார்குல மக்கள் ஜாதியபிமானத்தையும் என்னாளும் குலம் புகழ்பெற்றிலக வேண்டுமென்பதையும்மனதில் நினைந்து அம்மகானையே தேர்ந்தெடுப்பார்களென எமது முழுநம்பிக்கை ஆயினும் போட்டிகள் மிகுந்த இந்நாளில் நாடார்குல மக்கள்பல யூடையூறுகளில் சிக்கிக்கொள்ளாமல் மதமும் ஜாதியும் ஒன்றெனக்கருதி ஸ்ரீமான் டானியேல் தாமஸ்நாடார் அவர்களையே தேர்ந்தெடுங்கள். அப்புகழுடம்பு சட்டசபை ஆசனத்திலமர்ந்தால் குலத்திற்கும பல நலத்திற்கும் தீபமாக ஜொலித்திலங்குவாரென்பது திண்ணம். ஆகையால் நாடார்குல மக்காள்! காலமெல்லாம் பல ஞாபகங் கொள்ளாமல் ஸ்ரீமான் டி. தாமஸ்நாடார் அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கே. எம். தேவசகாய நாடார்.

### கத்தோலிக்கிறிஸ்தவ தொகுதி.

ஜாதிமத பேதமில்லாதவரும், சமரஸ திருஷ்டியுடையவரும், வாக்குச்சாதுர்யம், விஷயஞானம், கலையறிவு மிக்கவரும், பொதுநல சேவையிற் போதிய அநுபவமும், போதிய சாவகாசமும், போதிய சௌகர்யமும், போதிய வன்மையும், போதிய செல்வாக்குமுடையவரும், விசேஷமாய்ப் பாண்டிநாட்டுப் பரதகுலத்தவரின் பொதுநல உரிமைகளை அன்பும், ஆர்வமும் ததும்ப சகோதர உரிமையுடன் நோக்குபவரும், நமது முறையீடுகளைச் செவியாரக்கேட்டு மனதார நிவர்த்திக்கும் மாண்பினருமாகிய ஸ்ரீமான் டானியல்தாமஸ் அவர்களே நமக்குரிய நல்ல பிரதிநிதியாகும். அவருக்கே நமது ஓட்டுக்களை வழங்குவோம்; நன்மை பெறுவோம்.

குறிப்பு:—மேற்கண்டவாறுபரதகுல மித்திரன் பகர்வதை இதரகுலத்தவர்களெல்லாம்ஏற்பார்களாக. (ப-ர்.)

### சொக்கலால் பீடித்திருவிழா!

அருப்புக் கோட்டையில்
நடைபெற்றவைபவம்.

(நமது நிருபரிடமிருந்து.)

சரஸ்வதி பூஜையின் விசேஷ தினத்தன்று சொக்கலால் பீடியின் ஏஜண்டுகளான தனலெக்ஷிமி சோடா கம்பெனியார் செய்த விளம்பரம் மிகவும் ஆச்சரியத்தைத் தரக்கூடியதாக விருந்தது. ஸ்ரீமுத்துமாரியம்மன் மோட்டார் பஸ்ஸில் செடிகளாலும், கொடிகளாலும், பூமாலைகளாலும், விளம்பர போர்டுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதற்கென மதுரையிலிருந்து வந்திருந்த இங்கிலீஷ் பேண்டு காரில் முழங்கிக்கொண்டிருந்தது. நோட்டீஸ் கொடுப்பதற்கென எட்டுப் பேர்கள் ஏற்பட்டிருந்தனர். மத்தியானம் 2-மணிக்கு இவ்வூரிலிருந்து புறப்பட்டு பந்தல்குடி, திருச்சுழி முதலிய ஊர்களுக்குச் சென்றது. தனலெக்ஷிமி சோடா கம்பெனியின் புரோப்ரைட்டர்கள் பின் ஸீட்டில் அமர்ந்து, சொக்கலால் பீடிக்கட்டுகளை 25 பீடிவீதம் கொண்ட முழுக்கட்டுகளாக சுமார் முப்பது பண்டல்கள் வரை சூறை போட்டுக்கொண்டேசென்றனர். விளம்பர நோட்டீஸ்கள் பதினாயிரக்கணக்காக ஜனங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. பல நூற்றுக்கணக்கான ஜனங்கள் நோட்டீஸ்கள் வாங்குவதற்கும் பீடிக்கட்டுகளை அடைவதற்கும் பின்தொடர்ந்து சென்றனர். சுமார் $4\frac{1}{2}$ மணிக்கு கார் திரும்பி அருப்புக்கோட்டைக்கு வந்து, இராமநாதபுரம் ஜில்லாகலெக்டர் அவர்கள்விஜயத்திற்காக கொட்டைகளாலும்,வாழைகளாலும்,தோரணங்களாலும் அலங்கரித்து வைக்கப்பெற்ற சந்தைப்பேட்டை ரோடு, புதுக்கடை, பெரியகடை பஜாரின் வழியாகவும், புளியம்பட்டி பஜாரிலும், விளம்பர நோட்டீஸ்களையும் பீடிக்கட்டுகளையும் மாலை $6\frac{1}{2}$ மணிவரை சூறை போட்டுக்கொண்டே சென்றனர். பின் தொடர்ந்து சென்ற ஜனங்கள் ஆயிரக்கணக்காக இருக்கலாம். ஊரிலுள்ள ஜனங்கள் இதைப்பார்த்து பிரமித்து நின்றனர். இவ்வித விளம்பரம் செய்தவர்கள் இதற்கு முன்னால் எவருமில்லையென்றே சொல்லலாம். ரூபாய் 150—0—0 வரை செலவு செய்திருக்கலாமென கருதப்படுகிறது. ஊர் முழுதும் எங்குபார்த்தாலும் சொக்கலால் பீடி விளம்பர நோட்டீஸ்கள், வால்போஸ்டர்கள் சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கின்றன. சொக்கலால் பீடியை விசேஷமாய் விற்பனை ஏற்படச் செய்வதற்கு இவ்வூர் தனலெக்ஷிமி சோடா கம்பெனியார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியும், பிரயாசையும் அதிசயக் கத்தக்கதே.

நாடார்குலமித்திரன்
அக்ஷய ௵ அற்பிசி மீ ௯உ

## கைராட்டினமும், கதரும்.

நம் நாட்டிற்குக் கைராட்டினமும், கதரும் காமதேனுவென்று மகாத்மா காந்தி ஓயாது வற்புறுத்தி வருவதுடன் ஏழைகளின் இரட்சிப்புக்கு அத்தொழில் அத்தியாவஸ்யமாகவிருப்பதால், அத்தர்மத்தை முன்னிட்டாவது எல்லோரும் சிறிது நேரம் ராட்டினஞ் சுழற்றுங்கள்; தவறுமற் கதர் கட்டுங்கள் என்று சதா அவர் உபதேசமுஞ் செய்து கொண்டிருக்கிறார். அவ்வுபதேசத்தை பல உத்தமர்கள் கைக்கொண்டு விட்டார்கள். மற்றவர்களெல்லாம் பற்பல விதமான கொள்கையுடையவர்களாய் சிலர் சில வேளைகளில் கதர்க் கட்டியும், கட்டாமலும் சிலர் கட்டுவதற்கு மனமிருந்தும் கட்டாமலும், சிலர் கட்டவே கூடாதென்றுமிருந்து வருவதாகத் தெரிகிறது. பின்னும் இது விருத்தியாவதனால் நாட்டுக்கு நலனுண்டாவென்று அறியாமையால் மகாத்மாவிடம் வாதிக்கவும் செய்கிறார்கள். சிலர் இது மகாத்மா காந்தியின் இயக்கம்; நாட்டுக்கு இது தீங்கே தருமென்று கூடப் பயப்படுகிறார்கலாம். இதுவொரு புது இயக்கம்; இது தகாத இயக்கமென்றுஞ் சிலர் சாற்றுகிறார்கள். எவர் என்ன சொன்னாலும், எப்படி நினைத்தாலும் ராட்டினமும், கதரும் நம் நாட்டிற்குக் காமதேனுங் கற்பகத்தருவுமாகுமென்று மகாத்மா காந்தி பற்பல உதாரணங்களால் விளக்கிக் காட்டியிருக்கிறார். அதை மறுக்கவோ, வேறு வழி காட்டவோ ஒருவராலும் முடியாது.

நம் நாட்டில் ஒவ்வொரு பழய வீட்டின் முகடுகளில் நம் பாட்டிகள் நூற்ற ராட்டினங்கள் தூங்குவதினாலே இது நம்நாட்டிற்கு புராதனமும், மிகப்புனிதமுள்ளதுமான தொழிலென்று நமக்கு அறிவுறுத்துகின்றது. கேவலம் மிருகங்களைப்போல் நிர்வாணமாய் வசித்த பல நாடுகளுக்கு ஆடை கொடுத்து மானத்தைக் காப்பாற்றியது நம் மிந்திய நாடென்று பழஞ் சரித்திரங்கள் பகர்வதை யாரால் மறுக்க முடியும்? இத்தகைய நாடு, இங்கிலாந்தில் மான்செஸ்டர் வேலை நிறுத்தத்தாலும், ஜப்பானியர் சங்கடத்தாலும் துணியிறக்குமதி நின்று போய், நிர்வாணமாயிருக்க வேண்டிய நிலைமையிலிருந்தால் மகா மானக்கேடன்றோ?

சிலர் நம் நாட்டுக் கதர் கரடுமுரடாகவும், மிகக் கனமாகவும், பார்க்க அழகில்லாமலும், கட்டிக் கொள்ளக் கஷ்டமாகவுமிருக்கிறதென்று கூறுகிறார்கள். தேசாபிமானத்தின் பொருட்டு நான்கு முள ஆடையைக் கட்டிச் சமாளித்துக் கொள்ள முடியாத மனிதன் எப்படித் தேசத்தைக் காப்பாற்றும் வீரனாக முடியும்? மேலும் சித்திரமுங் கைப் பழக்கமென்றபடி நெய்யும் தொழில் நீண்ட காலம் நின்றுபோனமையால் புதிதாகவும் முரடாகவுந் தோணலாம். ஆடுகளோடு திரிந்த சிங்கம் தன்னையுணர்ந்தபோது அதனியற்கைக் குணம் வெளிவந்ததுபோல் அந்நிய ஆடை மயக்கமும், டாம்பீகமும் தணிந்து பட்டாடைகள் நமக்கு மோட்ச பலன் தாராதென்ற ஞானமுண்டானால் எல்லாம் இலேசாகவேயிருக்கும். நம் நாடு பல்லாயிர வருடங்களுக்கு முன்னமே மிக மெல்லிய ஆடைகளை நெய்து வந்திருக்கின்றதென்பதை டக்கா மஸ்லின் நமக்கு ஞாபகப்படுத்துவதுடன் சரித்திர வாயிலாகவும் தெரியவருகிறது. சுமார் ஆயிரத்து நாறு வருடங்களுக்கு முன்னிருந்த கவிச் சக்கிரவர்த்தியாகிய கம்ப நாடார் நம் நாட்டு வஸ்திரம் எவ்வளவு மெல்லியதாயிருந்திருக்கிறதென்பதை சமயம் வாய்ந்தபோதெல்லாம் வெகு சிறப்பாக விளக்கியிருக்கிறார் என்பதை ஈண்டெடுத்துக் காட்டுவோம்.

> நுட்சிலம்பியலர்ந்தன நுண்டுகில்
> கட்சிலம்பு கருங்குழலார் குழு
> உட்சிலம்பு சிலம்பவொதுங்க (லால்
> புட்சிலம் பிடம் பொய்கையும் [போன்றவே.

அதாவது, சீதாப் பிராட்டியாரை ஸ்ரீராமர் திருமணமுடிக்கப் போகும் போதுள்ள பெண்கள் கூட்டத்தைப் பற்றிச் சிறப்பித்துக் கூறிய கம்பர் அவர்கள், நுட்பமான சிலம்பிப் பூச்சிகளால் நெய்யப்பட்டிருப்பது போன்ற நுண்டுகில் (மிக மெல்லிய ஆடை) கட்டிக் கொண்டு சென்றதாக நம் நாட்டின் நெசவுத் தொழிலுக்கு ஏற்றங் கொடுத்திருக்கிறார்.

> வேணுவினெடுவரை விசும்பின் மீமிசை
> சேணுறு தியலைபானனைந்த செந்து (கில்
> பூணுறு மல்குலிற் பொருந்திப் [போதலால்
> காணிர் வானவர் நாட்டு நங்கை (மார்.

இக்கவியின் அர்த்தத்தை நாம் அதிகமாய் விரிக்கப் பிரியப்படவில்லை. ராமன் ஆற்றைக் கடப்பதற்கு அணை கட்டுங்கால் வானரங்கள் வீசியெறிந்த மலைகள் விழும்போது எழுந்த நீர்த் துளிகள் வானுலகத்திலுள்ள பெண்களின் சேலைகளை நனைத்துவிட்டதென்பதேயாம். கீழுலகத்திலெழுந்த நீர்த்துளிகளானது மேலுலகத்திலுள்ள மாதர்கள் சேலையை நனைத்து விட்டதென்றால் அதுவும் நெசவுத் தொழிலின் ஏற்றத்தையே காட்டுகிறது.

இவ்வாறு பலவேறு காரணங்களால் நெய்யுந் தொழில் இந்தியப் பூர்வீகத் தொழிலென்றும், நல்ல தொழிலென்றும், ஞானத்தருமென்றும் நன்கு தெரியக் கிடப்பதால் இதை மகாத்மா காந்தி காட்டும் புதுத் தொழிலென்றாவது, அல்ல பொல்லாத் தொழிலென்றாவது பயப்பட வேண்டியதில்லை. மறந்த தொழிலை மக்களுக்கு ஞாபகப்படுத்துகின்றாரேயன்றி அவர் புதிதாக ஒன்றும் சொல்லவில்லை. மறந்துபோன ஒரு வஸ்துவை ஒருவர் ஞாபகப்படுத்தி அதை எடுத்துக் கொள்ளுங்களென்றால் அவருக்கு முதலில் வந்தனம் செலுத்தி சந்தோஷத்துடன் மறந்ததை எடுத்துக் கொள்ள வேண்டியதை விட்டு, அது எங்களதா, எங்களப்பனதாவென்று கேட்டுக் கொண்டிருப்பது நன்றாகுமா?

மேல் நாட்டு மில்லும், மல்லும் நம் நாட்டுத் தொழிலை நசித்து விடுவதுடன் நல்ல ஞானத்தையும் குறைத்து விடுமென்று மகாத்மா காந்தி கூறுங் காரணங்களெவையும் சரியில்லையென்று மறுப்பாரொருவருமில்லை. ஆகையால் நம் நாட்டுத் தொழில் விர்த்தியாக வேண்டுமானால்—நம் நாடு என்றுங் குன்றாத செல்வ நிலைமையிலிருக்க வேண்டுமானால்—நாமும் தன்மரியாதையைக் காப்பாற்றிக் கொள்பவர்களாகக் காண வேண்டுமானால் நம்மிந்து தேச மக்கள் யாவரும் எப்போதும் நம் நாட்டுக் கதரையே கட்ட வேண்டும். நாடக ஆசாமிகளைப்போல் வீட்டுக்குள்ளொரு துணியும், வெளியிலொரு துணியும் கட்டிக் கொள்வது விசுவாசமற்ற வெறும் வேஷமேயாகும். கதரை யாதரிக்கிறவர்களை இருமனதாய், இரு வேஷமாய்க் காணும்வரையும், கதராபிமானங் காட்டுவது போல் நடித்து போலிக் கதர்களை வாங்கிவைத்துக்கொண்டு ஏமாற்றும் போலி வியாபாரிகளின் திருட்டு நடந்து கொண்டேயிருக்கும் ஆகையால் நம்மிந்து சகோதரர்கள் வருகிற தீபாவளிக்கு பந்துக்களுடன் கட்டுங் கோடி வஸ்திரங்களெல்லாம் கதர் மயமாக விளங்கச் செய்வார்களென்று நம்புகிறோம்

நமது நாடார் குல நண்பர்களும் இப்புண்ணிய கைங்கர்யமான கதர்ப் பிரசாரத்தில் மற்றத் தேசாபிமானிகளுடன் கலந்து அதிதீவிரமாய் வேலை செய்து வருவது மிகவும் போற்றத்தக்கது. மதுரை நாடார் ஊழியப் பிரசார சபை, விருதுநகர்; ராவ்பகதூர் டி. ஆர். வே. பெ. ரா. ரி, அருப்புக்கோட்டை, மு. மு. முதலாளி வாசகசாலை அங்கத்தினர்களும் கதர் விருத்தியாக வேண்டி பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய பெருமுயற்சியினாலே, தமிழ் நாட்டில் கதர் அணியும் கைங்கரியத்தில் நாடார்கள் மற்றவர்களை முந்திக் கொள்வார்களென்று நம்புகிறோம். சிவகாசி ஸ்ரீமான்கள் பலர் கதர் அணிந்து கொண்டிருப்பதுபோல் மற்ற ஜனங்களையும் கதர் கட்டும்படி சற்றே தங்கள் திருவாக்கைத் திறந்துவிடுவார்களாகில் இன்றே எல்லாம் கதர்மயமாயிலங்குமன்றோ! தீபாவளியன்று மகாத்மா காந்தி கட்டளையைச் சிரமேற்றாங்குவோமாக.

---

# குறிப்புகள்.

### ஜப்பானிலும் முட்டாள் களுண்டாம்.

நம்மிந்தியாவில் ஒரு சில மனிதர்களை மனிதர்கள் தொடக்கூடாதென்றும், கோயில், குளம், தெரு முதலிய பொது ஸ்தாபனங்களிலுங் கூட அணுகக்கூடாதென்றும் கொடுமைகூறும் அவைதீக முட்டாள்களைப்போலும், நாயும் கருப்பு மனிதர்களும் கோயிலுக்குள் வரக்கூடாதென்று தடுக்கும் கெட்டால் முட்டாள்களைப்போலும் ஒரு சிலரால் ஜப்பானில் ஈட்டா எனனும் ஒரு வகுப்பார் தீண்டாதவர்களாயிருந்தார்களாம். 50 வருஷங்களுக்கு முன்பே ஜப்பான் சக்ரவர்த்தி அவர்களை உயர் வகுப்பினராகப் பாவிக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும் இன்றுவரை அனுஷ்டானத்துக்கு வரவில்லையாம். அதன் பிறகு ஈட்டா வகுப்பினர் தங்கள் உழைப்பாலும் தியாகத்தாலும் எல்லாருடைய மதிப்பையும் பெற்றிருக்கிறார்களாம். அவர்களைச் சரியானபடி உயர்த்துவதற்கு ஜப்பான் பார்லிமெண்டில் ஒரு தனிக்கட்சி ஏற்பட்டுப் பலமாகப் போராடத்தீர்மானித்திருக்கிறார்களாம். இதனால் இந்தியாவில் எத்தனை காந்திவந்து புத்தி போதித்தாலும் எந்தச் சவர்ன்மெண்டார் உத்தரவு போட்டாலும் மடப்புத்தி நீங்காது; தீண்டா வகுப்பினரே நன்றாக இடித்துப் புத்தி வருவிக்க வேண்டுமென்று நன்கு புலப்படுகிறது. அப்போது தான் படித்தவர்களும் அவர்களுக்காக திரிகரண சுத்தியுடன் வேலைசெய்வர்கள்.

### இன்னுமொரு ஸ்திரீ

ஆமதாபாத்தில் மகாத்மாகாந்தி சத்தியாக்கிரக ஆச்ரமத்தில் இன்னுமொரு ஐரோப்பிய ஸ்திரீ வந்து மகாத்மா சிஷ்யையாகி மற்றவர்களுடனிருந்துநூல் நூற்கக்கற்றுக் கொண்டிருக்கிறாளாம். அவள் மகாத்மாகாந்தியிடமிருந்தும் அவருடைய சிஷ்யர்களிடமிருந்தும் ஞானஒளிபெறுவதற்காகத் தாம் வந்திருப்பதாகக் கூறுகிறாளாம். வாழ்வின் பாரமார்த்திகத்தன்மையை ராஜீய வாழ்வின் முன்னணியில் மகாத்மாகாந்தி கொண்டுவந்துவிட்டார்; இங்கிலாந்திலுள்ளவர்களால் இவ்வாறு செய்யமுடியவில்லையென்ற அம்மாது அபிப்பிராயங்கூறுகிறாளாம்.

### பார்ப்பனர்தந்திரம் பலித்ததா?

பொன்னேரித் தாலுகாவிலொரு கிராமத்தில் பிரசவத்தால் இறந்து புதைக்கப்பட்ட ஒரு ஸ்திரீ மறுநாளெழுந்து குழந்தைக்கு பால்கொடுத்துக் கொண்டிருக்கிறாளாம். அந்த உருவம் இந்துமத தேவஸ்தானத்தை கண்டித்துப் பேசுகிறதாம் பேலும் அக்குழந்தை கலிக்கவதாரமென்றுங் கூறுகிறதாம். அக்கலிக்கவதாரன் கவர்னரிடமாவது கவர்னர் ஜெனரலிடமாவது போய்ச் சொல்லட்டுமே! அவன் நினைத்தால் ஆகாத காரியமொன்றுளதா? இதெல்லாம் பார்ப்பனர் தந்திரமாகவேயிருக்கலாம். அது பலிக்குமா?

### மகாத்மா விடுதலை.

மகாத்மா காந்தியை நமது அரசாங்கத்தார் ஆறுவருஷங்கள் சாதாரண சிறைக்காவல் விதித்தார்கள். பின்னர் அவர் பால்கருணை கொண்டோ தங்கள் தவறுதலை உணர்ந்தோ பாதிவருஷங்கள் முடியுமுன்பே மகாத்மாவை சிறையிலிருந்து விடுதலை செய்தார்கள்.

பின்னர் சுயராஜ்பக்கட்சியார் பிடிவாதத்தால் சபர்மதி யாசிரமச் செயலிலிருக்கும்படி ஒருவருஷக்கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டார். அதிலிருந்துகொண்டே மதுவிலக்கல, தீண்டாமை யொழித்தல், புனர்விவாஹம், பால்யவிவாஹம் நூல் நூற்றல, கதர்க்கட்டல், பரஸ்திரீகமனம், ஏகபத்னி விரதம் முதலிய பற்பல விஷயங்களைப்பற்றி வெகுக்கமையாக எழுதப்பட்டு வரும் ஆக்ஷேபங்களுக்கும் சந்தேகங்களுக்கும் சரியான ஆப்புக்கடாவுங் கடுமையான வேலையைசெய்து கொண்டிருக்கிறார். அரசாங்கத்தாரைப்போல் இடையில் உங்களை விடுவிக்கிறோம்; மீண்டும் தலைமைவகிக்கிறீர்களாவென்றும் கேட்டுப் பார்த்தார்கள். அதற்கவரிணங்கவேயில்லை. அவர் டிசம்பர்மாசம் 2உ தாமே விடுதலைபெற்று நேராக பம்பாய் சென்று அஸ்ஸாம் காங்கிரஸுக்குப் போவாரென்று தெரியவருகிறது.

### பதினாலு நாட்கள்! தொண்ணூற்றி மூன்று போலிங் ஸ்டேஷன்கள்.

இந்தியாவில் எல்லாச் சட்டசபைகளின் தேர்தல்கள் நடப்பதற்கு இன்னும் பதினாலுநாட்கள் தானிருக்கின்றன. ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமிநாடாரவர்கள்வெற்றிபெற திருநெல்வேலி ஜில்லாவில் ஓட்டர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



களைப் பதிவுசெய்யக்கூடிய இடங்கள் அதாவது போலிஸ் ஸ்டேஷன்கள் 93 இருப்பதாகத்தெரிகிறது. இத்தனை இடங்களிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் ஸ்ரீமான் நாடாரை ஆதரிக்கும் நாடார் ஓட்டர்களும் மற்றும் பல வகுப்புஓட்டர்களுமாக சுமார் 15 ஆயிரம்பேர்கள் வந்து பதிவு செய்யவேண்டும். இவ்வோட்டர்களை யெல்லாம் ஒவ்வொரு இடத்திற்கும் அழைத்துவந்து பதிவு செய்விக்கவும் பதிவு சரியாய் நடக்கிறதாவென்று பார்த்துக்கொள்ளவும் விஷமக்காரர்கள் இடையிற் சூட்சிகள் செய்யாமற் பார்த்துக்கொள்ளவும் அபிமானத்துடன் திறமையாக வேலைசெய்யக் கூடிய ஆட்கள் 300 பேர்களாவது வேண்டியதிருக்கும். இம்மூன்னூறு பேர்களும் ஒரு வாரத்திற்கு முன்பே தங்கள் வேலைகளை ஆரம்பம் செய்ய வேண்டும். இம்முன்னூறு பேர்கள் இப்போது தயாராயிருப்பார்களா? இடலை. திருநெல்வேலி ஜில்லாவில் சுமார் 200 பேர்களாவது வெளியேற வேண்டும். 100பேர்களாவது வென்றுன்வாக்கூடாதா? இதுசமயம் ஸ்ரீமான் நாடாருக்கு இவ்வுதவி முக்கியமான தாயிருக்கும். ஆகையால் நாடார்குலாபிமானிகள் எல்லோரும் இன்றே புறப்பட்டுப்போய் வேலைசெய்யக் கோருகிறோம். நாமும் சில மனிதருடன் செல்வோம். யார்? யார்? புறப்படுகிறார்களென்பதையும் நமக்குத் தெரியப்படுத்தவார்களாக.

## மித்திரன் க்ஷேமநிதிலாட்டரி.

சீட்டுப் புஸ்தகங்களெல்லாம் பெரும்பாகம் அனுப்பி முடிந்தது. அனேகரிடமிருந்து விற்று அனுப்புவதாகவும் இன்னும் புஸ்தகங்கள் அனுப்புங்களென்றும் சந்தோஷச் சமாச்சாரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதனால் காம வெற்றிபெறுமென்ற தைரியமேற்படுகிறது. ஆயினும் புஸ்தகங்கள் பெற்ற மற்றும் அனேகர் இன்னும்பதில எழுதக்கூடவில்லை. அவர்களுடைய அன்பாகத பதிலை அறியமிகுந்த ஆவல்கொண்டுள்ளோம். இதுவிஷயம் முக்கியமான சிலவிடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்யவும் யோசிக்கிறோம். நமது சந்தாதாரர்களும் மற்ற நண்பர்களும் நம மித்திரன் க்ஷேமத்திற்கு ஒத்துழைத்து உதவிசெய்வார்களென்று பூரணமாய் நம்புகின்றோம்.

## காலட்சேபம்.

அருப்புக்கோட்டை ஸ்ரீமத் வனுதி காதநாயனார் திருமடாலயத்தில் அற்பிசி 3௨ இரவு கோயில்பட்டி நாவலர் ஸ்ரீமான் கணபதிநாயுடு அவர்களால் நந்தன் சரித்திரக்காலட்சேபம் வெகு சிறப்புடன் நடந்தேறியது. சுமார் 1000ஜனங்கள்குழுமி யிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்தவ தொகுதி.

இராமநாதபுரம்—திருநெல்வேலி ஜில்லா கிறிஸ்தவதொகுதிக்கு அபேக்ஷகராய் நிற்கும் நமது குலப்பிரதிநிதி ஸ்ரீமான் டானியல்தாமஸ்நாடார் அவர்களுக்கு இருவர் போட்டியாக நிற்கிறார்களென்பதை ஏற்கனவே அறிவித்துள்ளோம். நாட்டிற்கும், நாட்டினர்க்கும், நமக்கும் நம்மவர் எனக்கருதத்தகும் இன்னாருக்கே கிறிஸ்தவ சகோதரர்களனைவரும் தவறாது தங்கள் வாக்குகளைக் கொடுப்பார்களென்பதில் பேதமில்லையென்று நாமிருக்கும் நிலைமையில் ஏமாந்திருத்தலாகாது. ஆகையால் கிறிஸ்தவ சகோதரர்களே! அபிமானிகளே!! தேர்தல்தினமாகிய நவம்பர்மீ 8௨க்கு எட்டுதினத்திற்கு முன்னரே ஓட்டர்களை ஒருமுகப்படுத்தி தவறாது தங்கள் ஓட்டுகளை இன்னாருக்கே பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்வதுடன் ஓட்டுப்பதிவிடமாகிய ஒவ்வொரு போலிஸ் ஸ்டேஷனிலும் தேர்தல் தினத்தன்று தவறாது விஜயஞ்செய்து தவறுதல் ஏதும் நடவாதுபார்த்து தேர்தலில் ஜெயம் பெறச்செய்யுமாறு வேண்டுகிறோம்.

---

# சுயதேசத்
# துணியுடுத்தி
# சுபிக்ஷமடையுங்கள்.

# மதிப்புரை.

### மஹேந்திர ஜாலம்
### அல்லது ரஸ்புட்டீனின்
### மெஸ்மரிஸ வாழ்க்கை.

மேற்கண்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. ரஸ்புட்டீன் என்பவன் ஆசியாக்கண்டத்தின் வடபாகத்திலுள்ள ருஷியாவுக்குச் சொந்தமான சைபீரியாவில் மிகவும் அநாகரீகமும், ஒழுங்கீனமுமுள்ள தொபால்ஸ்க் என்னும் பட்டணத்தைச் சார்ந்த ஒரு கிராமத்திலுள்ள ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவன். இவன்தனக்குள் இயற்கையாயமைந்துள்ள ஒரு பெரிய வசியசக்தியினாலே அனேகரை மயக்கி கிறிஸ்தவ பாதரியாகி ருஷிய ராஜகுடும்பத்தையும் தன் வயப்படுத்தி அதன் மூலம் அரசாங்க வுயர்பதவி பெற்று அந்நாட்டையே ஆட்டிவைத்ததுடன், அனேக கன்னிகாஸ்திரீகளைக் கற்பழித்தும், மதத்தின் பேரால் பொருளீட்டியும் அவன் செய்த அட்டூழியங்களை மிகவிரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. நம்மிந்து தேசமடாதிபதிகள் கூத்திக்கும், கூத்துக்கும், குடிக்கும்,கோர்ட்டுக்கும் நமமடத்துப்பணங்களை கூசாமல் செலவுசெய்து வருவதுபோல், ரஸ்புட்டீன் கேள்விமுறையின்றி தான் றோன்றியாய் வேண்டியது செய்ய அந்நாட்டெவழக்கம் இடங்கொடுத்திருப்பதை வெகு தெளிவாய் காட்டப்பட்டிருக்கிறது. இஸ்லாமிய மதநூல்களை எல்லோரும் எளிதிலுணரும் வண்ணம் இனிய தமிழ் நடையில் எழுதிவெளியிட்ட சென்னை தாருல் இஸ்லாம ஆசிரியர் பா. தாவூத்ஷா சாஹிப் பி. ஏ. அவர்களே இந்நூலாசிரியராவர். அவர் தெள்ளிய தமிழ் நடையின் சிறப்பையும், வனப்பையும மிகவும பாராட்டுகிறோம். 190 பக்கங்கொண்ட இந்நூல் விலை அணு 12. விலாசம்:—

தாருல் இஸ்லாம் புத்தகசாலை,

சென்னை.

---

## கதரின் மகிமை.

இப்புஸ்தகம்டிம்மிஎட்டுப்பக்கங்கொண்டது. விருதுநகர் ராவ்பஹதூர் த. ரத்தினசாமி நாடார் ஞாபக சின்னவாசகசாலை அன்பர்களால் எழுதிவெளியிடப்பட்டது. இதில் கதரின மகிமையைப் பற்றி வெகு விரிவுடன் பற்பல மேதாவிகள் கூறிய உதாரணங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது. கதர் மூலையில சுயராஜ்யம் என்ற காந்தியுருவமும்,

எனக்கு மோக்ஷமும் வேண்டாம்;
இராஜ்யபாரமும் வேண்டாம்;
ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள்
துன்பம் நீங்ினால் போதும்

என்று மகாத்மாகாந்தி கூறிய உபதேசரத்தினங்கள் முன்பு தலைக்கப்பட்டும் நாட்டுக்கு [illegible] தருவது ராட்டினமே யெனநாமக்கல்ஸ்ரீமான்ரா. மகாலிங்கம் பிள்ளையவர்கள் பாடிய இராட்டினப்பாட்டு பின் பக்கத்தில் விளக்கப்பட்டுயிருக்கிறது. கதரின் மகிமை கடவுள் மகிமைக்கீடாகுமாகையால் காம விசேஷமாயொன்றும் விளக்கவேண்டியதில்லை. விலை காலணுத்தான்! வேண்டியவாகள் சுலபமாக வாங்கிப் படித்து கதரணிந்து ஏழைகள் கஷ்டகதீர்த்து மகாத்மாகாந்தி பிரியத்துக்காளாகி கடவுள் கிருபாகடாட்சத்திற்கும் உடையவர்களாகலாம். உண்மை! உண்மை!! உண்மை!!!

---

## வீட்டு வைத்தியர்.

இப்பெயர்கொண்ட புஸ்தகமொன்று கிடைக்கப்பெற்றோம். இதில் நாட்டிலேற்பட்ட சகல வியாதிகளும் அவற்றிற்கு நாட்டுமுறையான பரிகாரங்களும் வியக்தமாய்வரையப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும் வைத்திருந்தால் மிகநலந்தரும். வேண்டுவோர் எம். ஜேஷர்மா அன்கோ, மதுரை என்ற விலாசத்திற்கெழுதவும். விலை அணு நான்கு.

---

# திருநெல்வேலிஜில்லா கிராமத்தொகுதி.

# ஸ்ரீமான் துரைச்சாமிநாடார்

## அவர்களுக்கே ஓட்டுக்கொடுங்கள்.

### பலத்த போட்டியிருப்பதால் ஏராளமான
### பிரசாரகர்கள் வெளிவரவேண்டும்.

### குலாபிமானிகளுக்கு
### ஓர் வேண்டுகோள்.

8-11-26-ல் நடக்கப்போகிற சென்னைசட்ட சிருஷ்டிசபை எலக்ஷனில் ஸ்ரீமான் எ. ஆர். எ. எஸ். துரைசாமி நாடார் அவர்கள் திருநெல்வேலி ஜில்லா கிராமத்தொகுதிக்கு ஓர் அபேக்ஷகராக நிற்பதுதங்களுக்குததெரிந்த விஷயமே.

அதுவகைக்கு வேண்டும் பிரயத்தனங்கள் நடத்திகொண்டுவருகிற போதிலும் ஏனைய அபேக்ஷகர்கள் விடாமுயற்சியோடும் ஊக்கத்தோடும் வேலை செய்துவரும் இச்சமயத்தில் நாம் போதிய அளவு வேலை செய்தால் மட்டும் சித்திபெறலாமாகையால்,

நம் நாடார்மகாஜனசங்கம்மானேஜர், காரியதரிசி. பிரசாரகர்களும். மதுரை, திருமங்கலம், அருப்புக்கோட்டை, விருதுநகர், சிவகாசி, சாத்தூர், கடம்பூர், தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள குலாபிமானிகளும் முன்கூட்டி வந்து ஒன்றுசேர்ந்து ஏகமனதுடன் உழைத்தால் மட்டும் காரியம் சித்திபெறுமென்பதற்கு ஐயமில்லை. நாடார் பெருமக்கள் வாசஞ்செய்யும் இத்திருநெல்வேலிஜில்லாவில் இந்த எலக்ஷனிலும் நம்முடைய ஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொள்ளவில்லையானால் வேறு எந்த ஜில்லாவிலும் எக்காலத்தும் கைப்பற்றிக்கொள்ளமுடியாது. சென்ற எலக்ஷனில் நமக்கு மதுரை ஜில்லாவில் கிடைத்த ஸ்தானத்துக்குப் பதிலாக திருநெல்வேலிஜில்லாவில் கிடைக்கும்படி இந்த எலக்ஷனில் பிரயாசைப் படுவோமாக.

கூ. ச. வ. சோக்கலிங்கம்.

---

### ஸ்ரீமான் மா. வே.
### ஷண்முகவேல் நாடார்
### ஞாபகார்த்த வாசகசாலை,
### தூத்துக்குடி.

நாளது 8-11-26—திங்கட்கிழமை நடைபெறும் சென்னைசட்டசபை எலக்ஷனுக்கு திருநெல்வேலி ஜில்லா கிராமாந்திர தொகுதிக்கு காங்கிரஸ் சபையாராலும் நமது வாசகசாலையின் சார்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அபேக்ஷகரான ஸ்ரீமான் எ. ஆர். எ. எஸ். துரைசாமிநாடார் அவர்களுக்கு ஓட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

அன்னவர் பொதுஜன முன்னேற்றத்தையே தன்னேற்றமாகக்கொண்டு மதுபானவிலக்கு, விவசாயம், கைத்தொழில், வியாபாரம், கல்வி முதலிய அபிவிர்த்திக்கேதுவாகிய அம்சங்களை மிகவும் உயர்வடையும்படி செய்வார்கள். பரோபகாரியாகிய அன்னவருக்கே உங்களுடைய ஓட்டுரிமையை கொடுத்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அ. து. கலியாணசுந்தரம்,
ச. விவேகானந்தநாடார்,
காரியதரிசிகள்.

---

# தென்னாட்டில்
# பிரயாணக்கஷ்டம்.

திருச்செந்தூர் தாலுகாவின் தென் மேற்குப்பாகத்தில் மணல் சமுத்திரமென வருணிக்கத்தகுந்த தேரிமேடுகளால் சூழப்பட்ட பகுதியில் பிரபலம் வாய்ந்த பல பெரிய கிராமங்களும், யூனியன் நகரங்களுமிருக்கின்றன. பூர்வீக சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும், நாடுபார்க்க விரும்புகிற பிரயாணிகளும் சுற்றிப்பார்க்கத் தகுந்த பல சின்னங்களும் புராதீனமாய் பிரக்யாதி பெற்ற இடங்களும் பேர்பெற்ற சந்தைகளும் ஏராளமாயிருந்துங்கூட, மணல்பாங்கான இப்பகுதியில் ரோடு வசதியாவது இதர போக்குவரத்து சாதனங்களாவது இல்லாதபடியால் சுற்றுப்பிரயாணம் செய்பவர்களுக்கும் விசேஷமாய் அப்பகுதியில் வாசம் செய்பவர்களுக்கும் மிகுந்த பிரயாணக் கஷ்டம் மேற்பட்டிருப்பதை நேரிலனுபவித்தவர்களுக்கன்றி பிறருக்கு விளங்குவது எளிதல்ல. சில வருஷங்களுக்கு முன் வரையும் சீனி ஆலை சொந்தக்காரர்களான மெசர்ஸ் பாரி அண்டு கம்பெனியார் பரமன்குறிச்சி, தண்டுப்பத்து மார்க்கமாய் குலசேகரன்பட்டணம் வரை போட்டிருந்த டிராம் ஸர்வீஸினால் ஒருவாறு சௌகரிய மேற்பட்டிருந்தது. இடையில் ஷை கம்பெனியார் தம்சொந்த வசதியைக் கருதி ஷை லயனைமாற்றி விட்டபடியால்பழையகஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இப்பகுதி பெரிய மணல்மேடுகளால் சூழப்பட்ட விஸ்தாரமான பிரதேசமாயிருப்பதினால் ரோடு வசதியேற்படுத்துவதில் அநேக லட்சக்கணக்காகச் செலவேற்படக்கூடுமென முயற்சி செய்யப்படாதிருப்பதாகத் தெரிகிறது.

திருச்செந்தூர் ரயில்வே லயனை குலசேகரன்பட்டணம்வரை நீட்டுவதான ஆலோசனை ஏற்பட்ட சமயத்தில் இப்புதிய லயனை பொதுஜனங்களின் க்ஷேமத்தைக்கருதி பரமன்குறிச்சி, படுக்கப்பத்து, தண்டுப்பத்து, உடன்குடிமார்க்கமாய் போடவேண்டுமென பொதுஜனங்கள் விசேஷக்கிளர்ச்சிசெய்தும் யாதொரு குடியிருப்பில்லாத கடற்கரை ஓரமாகவே போடுவதென முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஆயினும் இப்பகுதி வாசிகளின் அதிஷ்டவசமாய் ஷை கடற்கரை லயன் போட்டுமுடிய இன்னும் பல வருஷங்கள் செல்லுமெனத் தெரிகிறது. இந்த சந்தர்ப்பத்தில் வெகு துரிதமாகச் செய்யவேண்டிய முயற்சி யொன்றிருக்கிறது. அதாவது, திருச்செந்தூர் ரெயில்வே லயனில் நாசரேத் ஸ்டேஷனுக்கும் குரும்பூர் ஸ்டேஷனுக்கும் மத்தியில் 47-ம் மீர். தந்திமரத்திற்கு சமீபத்தில் நான்கு பப்ளிக்பாதைகள் சந்திக்கின்றன. அந்த இடத்திலிருந்துதெற்கே காணம், செங்குழி, காயாமொழி, பரமன்குறிச்சி, தண்டுப்பத்து, படுக்கப்பத்து, சுண்டன்கோட்டை, உடன்குடி முதலிய அநேக ஊர்களின் மார்க்கமாய் குலசேகரன்பட்டணம் வரை பப்ளிக் மணல்பாதை ஏற்பட்டிருக்கிறபடியால் அந்த இடத்திலிருந்து ஷை ஊர்களின் வழியே குலசேகரன்பட்டணம் வரை டிராம் லயன் போடும்படி பல ஊர் ஜனங்களும் தனித்தனியாகத் திருநெல்வேலிஜில்லா போர்டுக்கு மகஜர்களனுப்பியும் போர்டு மெம்பர்களுக்கு எடுத்துச்சொல்லியும் இடைவிடாமல் முயற்சிசெய்யவேண்டும். கச்சினுவிளை பஞ்சாயத்திலிருந்தும் மற்ற ஊர்களிலிருந்தும் அநேக மகஜர்கள் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 1925—26-ம் வருஷத்திய அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட்டிலும் டிராம லயன் ஒன்று போடுவதான உத்தேசமிருப்பதாக ஜில்லா போர்டார் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நல்ல சந்தர்ப்பத்தில் தென்பகுதியிலிருந்து ஏராளமான மகஜர்களையனுப்பி முயற்சிசெய்தால் நலமாயிருக்கும்.

க. சு. தசரதன்,
சீனத்தோப்பு.

## நாகரீகமும், அநாகரீகமும்.

(P. திருமேனிநாதன்.)

உலகில் ஒவ்வொரு நிமிஷந்தோறும் நிகழும் காரியங்களை நம் அறிவினால் பகுத்தறிந்து நல்லவைகளைச் செய்தும், அல்லாதவைகளைத் தள்ளியும் பிரவர்த்திப்பதுதான் நாகரீகமெனப்படும். ஆகவே, பகுத்தறியும் தன்மையுள்ளவர்களாகிய மானிடர்களிடத்திலேயேதான் நாகரீகம் பிறக்கக் காரணமாயிருக்கிறது. இனி நாகரீகமல்லாத அநாகரீகமென்றால் என்னவென்று கவனிக்கின், பகுத்தறியும் சக்தியற்றவைகளான மிருகம், பறவை முதலிய உயிர்வாழும் பிராணிகளின் செய்கையைத்தான் அநாகரீகமெனச் சொல்ல வேண்டியதிருக்கிறது. நம்மில் யாரும் முரட்டுத்தனமாக ஒரு காரியத்தை ஆராய்ந்தறியாது செய்துவிட்டால், "மிருகத்தனமாய்ச் செய்துவிட்டாயே" என்று சொல்லிக் கொள்ளுவதை நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது மிருகத்தனமென்பதும் அநாகரீகம் என்பதும் ஒருபொருள் சொற்களாகின்றன. கடவுளுடைய சிருஷ்டியிலே பெரும்பான்மையான மிருகம் பறவை முதலிய உயிர்ப்பிராணிகள் பொதுவாக வெகு விசித்திரமாகவும் ஆச்சரியமாகவும் அமைப்பில் மிக அழகாகவும் காட்சியளித்துக் கண்களைக் கவர்கின்றன. இவைகள் இயற்கையிலேயே இப்படி வனப்புள்ளவைகளாயிருந்தாலும் கூட, அவைகளின் செய்கையானது பகுத்தறிந்து செய்யப்படாததால், பெரும்பான்மையான உயிர்ப்பிராணிகளைக் கண்டால் நமக்கு வெறுப்பும், அச்சமும் உண்டாகின்றன. உதாரணமாக நல்லபாம்பு பார்ப்பதற்கு அழகாயிருக்கிறதென்று சிறு குட்டியிலே எடுத்து பால்விட்டு வளர்த்துவந்தாலும், அதன் பருவநிலை வந்ததும் நம்மைக் கடிக்கப் பின் வாங்குகிறதில்லை. பால்விட்டு வளர்த்தவனல்லவா, அவனுக்கு நாம் நன்றிகாட்ட வேண்டுமே யென்ற அறிவில்லாததினால், நம்மைக் கடிக்க முற்படுகிறது. நாமும் அதைக்கண்டவுடனே பயந்து ஓடி ஒளிகிறோம். ஆகவே, பார்ப்பதற்கு அழகானதும் நாகரீகமானதுமான தோற்றமாயிருந்தாலுங்கூட, அதன் செய்கையும் நாகரீகமாகவிருக்கவேண்டுமென்பது நன்கு தெளிவுபடுகிறது. ஒரு சிங்கத்தையாவது புலியையாவது நாம்பார்க்கும்போது கண்ணுக்கு மிகவும் அழகாயிருக்கிறது. ஆனால் கோபங்கொண்டு பயங்கரமான தோற்றத்துடன் சிறிதும் காருண்யமின்றி அற்பப்பிராணிகளை கொல்லுகிறோமே என்ற பகுத்தறியும் உணர்வின்றி தன்னெதிர்ப்பட்ட உயிர்ப்பிராணிகளின்மேல் பாய்ந்து அடித்து, சின்னபின்னமாக்கி இரத்தம் பீரிட்டு ஓட, மாமிசங்களைத் தின்னும் போது, அதன் கோபச்செய்கை நமக்கு அநாகரீகமாய்த் தோற்றுகிறது. ஆகவே நாகரீகமென்பது என்னவென்று இன்னும் ஆழ்ந்து ஆராயும் போது ஒருவருக்கும் இம்சை செய்யாமலும், ஒருவர் மனம் புண்படநடவாமலும், தன்னைப்போல் உலகத்திலுள்ள எல்லா ஜீவ கோடிகளையும் நினைத்து அன்புகாட்டி, பகுத்தறிவுடன் பிரவிர்த்தித்து நாம்பிறந்தகடனை இறக்கும் வரையும் வெகு எச்சரிக்கையாக விருந்து கழிக்கவேண்டியதிருக்கிறது. பரந்த இவ்வுலகில், சிற்சில பிரதேசங்களில் மானிட ஜீவர்களும் காடுகளில மிருகங்களைப் போன்று வாழ்ந்து வருகின்றார்கள். மற்றுஞ் சில தாய்தகப்பன், பெண்டு பிள்ளை, வீடுவாசல் என்ற வாழ்க்கை நலமின்றி இயற்கை சுபாவத்துடன் மிருகங்களுக்கு ஒப்பாகத் திரிகிறார்கள். ஹுச்சாரியார்கள் தென்னாப்பிரிக்காவிலிருக்கிறார்களென்று இன்றைக்கும் கேள்விப்படுகிறோம். இவர்களை நாம் அநாகரீகர்கள், மிருக சுபாவமுள்ளவர்கள் கொடியவர்கள் என்று நினைக்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல சவரஞ்செய்து, தற்காலக் குடும்பியாகிய கிராப்வைத்து, கோணவுச்சியும் எடுத்து தலைசீவி மேல்ச்சட்டை, கால்ச் சட்டை, பூட்ஸ் முதலிய ஆடைகள் அணிந்து அலங்கரித்துவிட்டாலும், அவர்களை நாகரீகர்கள் என்று நாம் ஒப்புக்கொள்ளத் தயாராகவிருக்கிறோமா? இல்லை இன்னும் இது போல் இந்தியாவிலும் நாட்டுப் பகுதிகளில் சிற்சில இடங்களில், நம்மைப் போல் வீடுவாசல், கன்று காலி, உற்றார், உறவினர் என்று சேர்ந்து வாழ்ந்தாலுங்கூட சுத்தமின்றியும், விகாரமாயும், கொச்சைப்பாஷையுடன் கல்விவாசனையின்றி குரூரத்தனமாகப் பேசும் மனிதர்களைக் காணும்போது காட்டுமிராண்டிச்சாதி என்று நினைக்கிறோம். இன்னும் இப்படியே, பெண்டுபிள்ளை உற்றார், பெற்றார் என்று சேர்ந்துவாழும் மனித வர்க்கங்களிலுங்கூட சிலர் மகா முன்கோபிகளாயும் எதார்த்தமலர்ச்சியில்லாதவர்களாயும் எந்தக்காரியத்தையும் முன்பின் யோசித்துச் செய்யாதவர்களாயும், மனிதசுபாவமற்றவர்களாயும் வாழும் மனிதர்களுமிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடன் நெருங்கவும், பழகவும், பேசவுமகூட நமக்கு அச்சம் ஏற்படுகிறதில்லையா? ஏன் கடவுள் இவர்களுக்கு விசேஷமாகக் கொடுத்த ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை இவர்கள் பிரயோஜனப்படுத்துகிறதேயில்லை.

இவர்களும் மனிதர்கள்தானென்றாலுங்கூட இவர்களுடையகோரமானபார்வையையும், மிருக சுபாவத்தையும் காணும்போது அச்சமுண்டாவதனால் இவர்களை அநாகரீக வகுப்பில் தள்ள வேண்டியதிருக்கிறது. உலகத்திலேயே மகாநாகரீகர்கள் என்று நவிலப்படும் மேல்நாட்டார் தங்கள் நுண்ணறிவினால் பல அற்புதமான இயந்திரங்களைக் கண்டுபிடித்து அவைகளின் பிரயோஜனங்களை உலகத்தார் அனுபவிக்க நேரும்போது, தேவ சிருஷ்டியாவென மயங்கவேண்டியதிருந்தது. சன்மார்க்கத்திற்குச் சிறிதும் பொருந்தாத அவர்களுடைய நாகரீகத்தின் முடிவிற்குப் போவோமானால் அநாகரீகத்தில்தான்கொண்டுபோய்விடப்படுவோமென்பதில்சிறிதும்சந்தேகமில்லை. அவர்களுடைய நாகரீகத்தின் முதிர்ச்சியை மகாயுத்தத்தின்போது கண்கூடாகக் கண்டுவிட்டோம். பேராசையும், அகங்காரமும், அகம்பிக்கையுமே அதிகம் தெரிந்தன. தங்கள் நுண்ணறிவால் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரசாதனங்களையும் தங்களின் எண்ணங்களுக்குப் பலிகொடுத்தார்கள். இயந்திரசாதனங்கள் ஊர்களை அழித்தன. கோடானகோடி உயிர்களை மாய்த்தன. குழந்தை குட்டிகள் என்றாவது, பெண்டுபிள்ளைகள் என்றாவது சிறிதும் ஈவிரக்கமின்றி பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தினர். பூமி பிடிப்பதிலும் காணிபிடிப்பதிலும் கடலை மறிப்பதிலும் பேராசையுள்ளவர்கள், இராவண யுத்தத்தில் மூல பலங்கள் மாதிரி வீணாகச்செத்து மடிந்தார்களே யொழிய ஆசைகொண்டபடி ஆக்கிரமித்துக் கொண்டது ஒன்றுமில்லை. இன்னும் பேராசை பெருநஷ்டமென்றபடி, யுத்தத்தின் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் அவர்களே அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய நாகரீகம் பணத்தையும், இனத்தையும், பலத்தையும் இழக்கச்செய்ததைத் தவிரவேறு ஒன்றையும் சாதிக்கவில்லை இப்படிப்பட்ட பேராசைபிடித்த அநாகரீகத்தை, நாகரீகம் என்று எம்முறையால் ஏற்பது? நாகரீக முறையில் பல இயந்திரங்களைக் கண்டுபிடித்தவர்கள் கடைசியில் கோரத்தனமாக ஒருவரை ஒருவர் கொல்லுவதற்குத்தானே பிரயோஜனப்படுத்தினார்கள்.

அவர்களுடைய நுண்ணறிவை சன்மார்க்கவழிகளில் ஈடுபடுத்தி தங்களைப்போன்று இதர தேசத்தார்களையும் நினைத்து வருவரேல் உலகோபகாரமாயிருக்கும். அன்றி நாகரீகமெது என்ற முடிவும் தெரிந்துவிடும். நல்ல ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு வெளித்தோற்றத்திற்கு சுத்தமாகக் காணப்பட்டாலும், அகத்தில் அன்பில்லாமலும் ஒவ்வொரு நிமிஷமும் நம்மால் செய்யப்படும் காரணகாரியங்களையும் செய்கைகளையும் பகுத்தறியாமலும், தன்னைப்போல் பிறரையும் மதித்து இன்சொற்களால் பேசாமலுமிருப்போமானால் நம்மை நாம் நாகரீகர்கள் என்று சொல்லிக்கொள்ளவோ, நினைக்கவோ இடமில்லை.

---

## ஓட்டர்களே!

உங்கள் ஓட்டுகளை நமது குலப் பிரதிநிதிகளுக்கே பதிவு செய்யுங்கள். ஏனையோரையும் போடும்படி செய்யுங்கள்.

## நோட்டீஸ்.

இராமநாதபுரம்ஜில்லா பள்ளிமடம்தாலுகா அருப்புக்கோட்டையில் நெல்,எண்ணெய்முதலிய வியாபாரம் செய்து வந்த ம. பச்சைநாடார் குமாரர்கள் ம. ப. சங்கலிங்கநாடார் 1 ஷை தம்பி பழனிச்சாமிநாடார் 2 பேர்களும் நாளது அக்ஷய வருஷம் சித்திரைமாசத்தில் ஏதோ கெட்ட எண்ணங்கொண்டு வியாபாரத்தையும் நிலுவை செல்லும்புள்ளிகளையும் கவனியாமல் திடீரென்று எங்கேயோ போய் தலைமறைவாய் இருந்து கொண்டார்கள். இது விவரம் நாங்கள் வகையறா கிரடிட்டர்களுக்கு தெரிந்து, நாங்களும்ஷை ம. ப. ச. & ப கடைக்காரியம் பார்த்துவந்த ம. ச. மீனாக்ஷிசுந்தரநாடாரும், ஷை அருப்புக்கோட்டையில் மு. மு. முத்துக்குமாரஸாமிநாடாரவர்கள் 1, ப. உ. ஆ. சிதம்பரநாடாரவர்கள் 2, ப க உ அய்யாச்சாமிநாடாரவர்கள் 3, பெ. பழனிச்சாமிநாடாரவர்கள் 4, ச. க சு. துரைச்சாமிநாடாரவர்கள் 5, இந்த ஐந்து பேர்களையும் டிரஸ்டிகளாக நியமித்து 14—6—26-ல் 12 அணா ஸ்டாம்பில் ஓர் முச்சலிக்கா எழுதிக்கொடுத்தும் சாமான் சரக்குகளை ஒப்புவித்தும் ஷையார்களும் கிரடிட்டர்களும் சேர்ந்து சரக்கு சாமான்களை விற்பனை செய்து ஷை ம. ப. ச. & ப கணக்கில் கண்ட எல்லா கிரடிட்டர்களுக்கும் ஷை தொகைகளை ஈவித்துக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஷை முச்சலிக்காவின் சாத்துப்படி 14—6—26-க்குள் ஷையார்கள் வராமல் இன்னமும் மறைந்து கொண்டிருப்பதால் கிரடிட்டர்கள் பாக்கிகளை வசூலிக்கும் விஷயமாய் கோர்ட்டு மூலம் விவகாரத்துக்குப்போனால் கஷ்டநஷ்டம் வருமென்பதையும் தொகைகுறைந்து போகுமென்பதையும் உத்தேசித்து 10—11—26 வரை நிறுத்திவைத்திருக்கிறோம். ஷைதேதிக்குள் ஷை ம. ப. சங்கலிங்கநாடார், & பழனிச்சாமிநாடார் இவர்கள் வந்து ஒழுங்கு பண்ணி கிரடிட்டர்களாகிய எங்கள் வகையறாவுக்கு பாக்கித் தொகையை கொடுக்காத பக்ஷத்தில் ஷையார்களை எதிர்பாராமலே கோர்ட்டுமூலம் இன்ஸால்வென்ஸியாக்கி ஷையார்களுடைய ஸ்தாவரஜங்கம சொத்துக்களையும் இன்னும் மறைவுதல் செய்திருக்கும் பொருள்களையும்இன்ஸால்வென்ஸி கோர்ட்டுக்குக் கொண்டுவந்து வசூலிக்க உத்தேசித்திருக்கிறோமென்பதை இதன் மூலம் தெரிவித்திருக்கிறோம்.

தெ. சி. கா. பெரியசாமிநாடார்
பிரதர்ஸ்,
தெ. சி. கா மாரியப்பநாடார்,
கூ. சி. ரா. அ. செங்கசாமிநாடார்,
ப. அ. அய்யம்பெருமாள் நாடார்,
தம்பி—காமாக்ஷி நாடார்,
விருதுநகர்,
மு. பெ. முத்துமாலைநாடார்,
பெ. பழனிச்சாமிநாடார்,
வ. சுந்தரச்சாமிநாடார்,
அருப்புக்கோட்டை.

---

எங்கும் கியாதிபெற்ற

## இரணியல் ஜரிகை வஸ்திரங்கள்.

சகல ஜாதியாருக்கும், மொத்தமாக வியாபாரிகளுக்கும் அவரவர் விருப்பத்திற்கிணங்கும்படி புடவை, கவணி, ஸாரி பலமாதிரி புளியிலை கரை நேரியல், ஜரிகைச் சேலை, விளிம்பு ஜரிகை துப்பட்டாக்கள், வேஷ்டிகள், கட்டி திணுசுகள், அனேக விதமான துண்டுகள், பட்டுத் துப்பட்டாக்கள் முதலிய எவ்வித வஸ்திரங்களும் உயர்வான தரமாக ஆர்டர் கிடைத்த 10 தினங்களுக்குள் வி. பி.மூலமாக அனுப்பப்படும். கூடுதல் விபரம் வேண்டியவர்கள் மானேஜர் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

இ வ. நீலகண்ட பிள்ளை,
மானேஜிங் புரோப்ரைட்டர்,
"இரணியல் கிளாத் ஸ்டோர்"
இரணியல், நெய்யூர் போஸ்டு, தென் திருவிதாங்கூர்.

சுத்தக் கதர் உடுத்துங்கள். கை இராட்டினம் சுற்றுங்கள்.

கைக் குத்து அரிசி சமைத்துண்ணுங்கள்



உடனே குணம் தரும். முக்கியஸ்தர்கள் வாங்கி தர்ம வைத்தியம்செய்ய ஏதுகரமுள்ளது. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்பெறும்.

## தேள்கடி மருந்து.

தைலம்
சேர் 12-க்கு 3-0-0
சேர் 1-க்கு 0-5-0
தூள் புட்டி 1-க்கு 0-6-0
புட்டி 12-க்கு 3-12-0 தபால் செலவு பிரத்தியேகம். குறைந்தது 3 சேர் அல்லது 3-புட்டி தருவிப்பது நலம்.

க. பெ. ச. சமுத்திரம் சகோதரம்
c/o மகாத்மா காந்தி கதர் வஸ்திராலயம், விருதுநகர்.

காந்தியடிகள் எழுதிய "ஆரோக்ய வழி" என்னும் புஸ்தகம் படியுங்கள்.